# பத்தாம் வகுப்பு : அரசு பொதுத்தேர்வு வினாத்தாள் : மார்ச் 2026

காலஅளவு : 3.00 மணி நேரம்] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி-I (மதிப்பெண்கள் : 15)

குறிப்பு: (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். $15 \times 1 = 15$

(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. "இருவர் உரையாடுவது போன்ற ஓசை" என்பது ______.
(அ) அகவலோசை (ஆ) துள்ளலோசை (இ) தூங்கலோசை (ஈ) செப்பலோசை

2. இரவீந்திரநாத் தாகூர் ______ மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ______ மொழியில், மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது
(அ) ஆங்கில, வங்காள, (ஆ) வங்காள, ஆங்கில
(இ) வங்காள, தெலுங்கு (ஈ) தெலுங்கு, ஆங்கில

3. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் யாவர் ?
(அ) உதியன் ; சேரலாதன் (ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
(இ) பேகன் ; கிள்ளிவளவன் (ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

4. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைந்தது –
(அ) வேற்றுமை உருபு (ஆ) எழுவாய் (இ) உவம உருபு (ஈ) உரிச்சொல்

5. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் எது ?
(அ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது (ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
(இ) இகழ்ந்தால் இறந்து விடாது என்மனம் (ஈ) என்மனம் இறந்து விடாது இகழ்ந்தால்

6. செய்தி (1) :ஒவ்வோர் ஆண்டும் சூன் 15–ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி (2) :காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
செய்தி (3) :இந்தியாவிற்குத் தேவையான மழை அளவில் எழுபது விழுக்காடு மழையைத் தென்மேற்குப் பருவக்காற்றாகக் கொடுக்கின்றேன்.
(அ) செய்தி (1) மட்டும் சரி (ஆ) செய்தி (1), (2) ஆகியன சரி
(இ) செய்தி (3) மட்டும் சரி (ஈ) செய்தி (1), (3) ஆகியன சரி

7. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது ;
வானம் இருண்டது ; வாடைக் காற்று வீசியது.
பொருத்தமான தலைப்பைத் தேர்க.
(அ) உயிர்ப்பின் ஏக்கம் (ஆ) நீரின் சிலிர்ப்பு
(இ) மொட்டின் வருகை (ஈ) காற்றின் பாடல்

8. 'வா' என்ற வேர்ச்சொல்லின் விளித்தொடரைத் தேர்க.
(அ) குழந்தை வந்தது (ஆ) வந்த குழந்தை
(இ) வந்து நின்றது (ஈ) குழந்தையே வா!

**9.** நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு – இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே,

(அ) பாண்டிய நாடு, சேர நாடு (ஆ) சோழ நாடு, சேர நாடு

(இ) சேர நாடு, சோழ நாடு (ஈ) சோழ நாடு, பாண்டிய நாடு

**10.** "கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது" – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –

(அ) பாடிய ; கேட்டவர் (ஆ) பாடல் ; பாடிய

(இ) கேட்டவர் ; பாடிய (ஈ) பாடல் ; கேட்டவர்

**11.** புதன்கிழமையை ஒன்றாம் தேதியாகக் கொண்ட நாள்காட்டியில் அடுத்த வார செவ்வாய்க்கிழமையைத் தமிழெண்ணில் தேர்க.

(அ) க (ஆ) அ (இ) ரு (ஈ) எ

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு **(12,13,14,15)** விடை தருக.

"விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல் "

**12.** இப்பாடல் இடம்பெற்ற நூலைத் தேர்க.

(அ) கம்பராமாயணம் (ஆ) காசிக்காண்டம்

(இ) தேம்பாவணி (ஈ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

**13.** பாடலின் ஆசிரியரைத் தேர்க.

(அ) பரஞ்சோதிமுனிவர் (ஆ) இளங்கோவடிகள்

(இ) அதிவீர ராம பாண்டியர் (ஈ) கம்பர்

**14.** 'செப்பல் ' என்ற சொல்லின் பொருள்

(அ) வருதல் (ஆ) வியத்தல் (இ) எழுதல் (ஈ) கூறுதல்

**15.** சீர் எதுகைச் சொற்களைத் தேர்க.

(அ) ஒருவன் – எதிரின் (ஆ) திருந்துற – வருக

(இ) விருந்தினனாக – வியத்தல் (ஈ) உரைத்தல் – செப்பல்

பகுதி-II (மதிப்பெண்கள் : 18)

பிரிவு – 1

குறிப்பு: **எவையேனும் நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **21– ஆவது** வினாவிற்குக் **கட்டாயமாக** விடையளிக்கவும். $4 \times 2 = 8$

**16.** கரப்பிடும்பை இல்லார் – இத்தொடரின் பொருள் கூறுக.

**17.** விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.

(அ) முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.

(ஆ) ஒரு நாட்டின் நாட்டுவளம், சொல்வளத்தை உருவாக்குகின்றது.

18. மென்மையான மேகங்கள், துணிச்சலும், கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக.
19. செங்கீரை ஆடுதலில் எந்தெந்த அணிகலன்கள் சூட்டப்படுவதாக முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் குறிப்பிடுகிறது ?
20. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்ட ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
21. ‘உலகு’ – என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு–2

குறிப்பு : **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 × 2 =10

22. பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.
சேரர்களின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.
23. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்து கொண்டு தொடர்புகளை முழுமை செய்க.
(அ) காட்டு விலங்குகளைச் ______ தடைசெய்யப்பட்டுள்ளது.
(ஆ) செய்த தவறுகளைச் ______ திருந்த உதவுகிறது.
(சுட்டல், சுடுதல்)
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக. அமர்ந்தான்
25. கட்டுரை படித்த – இச்சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபைப் பயன்படுத்தித் தொடரை விரித்து எழுதுக.
26. பொதுவியல் திணை பற்றிக் குறிப்பெழுதுக.
27. கலைச்சொற்கள் தருக. (அ) Happiness (ஆ) Story teller
28. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக. (அ) மலை – மாலை (ஆ) விடு – வீடு.

(பகுதி-III (மதிப்பெண்கள் : 18)

பிரிவு –1

குறிப்பு : **எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் **சுருக்கமாக** விடையளிக்கவும். 2 × 3 =6

29. பலதுறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது ?
30. “தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்” இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார். பழங்காலத்தில் கடல்கடந்த பயணங்கள் அனைத்தும் காற்றால் இயக்கப்பட்ட பாய்மரக் கப்பல்களால்தான் நிகழ்ந்தன. காற்றின் ஆற்றலை, ‘வளி மிகின் வலி இல்லை’ என்று ஐயூர் முடவனார் சிறப்பித்துள்ளார். இதுபோன்றே மதுரை இளநாகனார் கடும்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று காற்றின் வேகத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.
(அ) உலகம் குறித்துத் தொல்காப்பியர் கூறுவது யாது ?
(ஆ)கடல்கடந்த பயணங்கள் பழங்காலத்தில் எவ்வாறு நிகழ்ந்தன ?
(இ) மதுரை இளநாகனாரின் காற்று பற்றிய கருத்தை எழுதுக.

பிரிவு–2

குறிப்பு: **எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் **34–க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். $2 \times 3 = 6$

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை ?
33. “தான் எவற்றையெல்லாம் அறியவில்லை” – என்று கருணையன் கூறுகிறார் ?
34. அடிபிறழாமல் எழுதுக.
(அ) ‘மாற்றம்’..... எனத் தொடங்கி ‘அட்சய பாத்திரம்!’ என முடியும் ‘காலக்கணிதம்’ பாடல்.
அல்லது
(ஆ) ‘அள்ளல் பழனத்(து)’ எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரம் பாடல்.

பிரிவு–3

குறிப்பு : **எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் **சுருக்கமாக** விடையளிக்கவும். $2 \times 3 = 6$

35. மார்கழித் திங்கள் அதிகாலை நேரத்தில் மக்கள் நடைப்பயிற்சி மேற்கொண்டனர். சிலர் மிதிவண்டியில் சென்றனர். சாலை ஓரத்தில் இருந்த வீட்டின் மதிலை ஒட்டிச் செங்காந்தள் மலர்கள் பூத்துக் குலுங்கியபடி இருந்தன. அவற்றைப் பார்த்தபடியே வீடு சென்றேன். பத்தியைப் படித்துத் தொகைநிலைத் தொடர்களைக் கண்டறிந்து எழுதுக.
36. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.
37. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

பகுதி-IV (மதிப்பெண்கள் : 25)

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். $5 \times 5 = 25$

38. (அ) ‘சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்’ என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.
அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றாமாகக் கம்பன் காட்டும் கவி..... தண்டலை மயில்கள் ஆட ..... இவ்வுரையைத் தொடர்க.
அல்லது
(ஆ) ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் கூறிய கருத்துகளை வள்ளுவர் வழிநின்று விளக்குக.
39. (அ) மாவட்ட அளவில் நடைபெற்ற ‘பெண்கள் நாட்டின் கண்கள்’ எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.
அல்லது
(ஆ) உங்கள் பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலையைச் சீரமைத்தல் வேண்டி மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**40.** காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



**41.** நீலகிரி மாவட்டம், பாரதிதாசன் நகர், எண்.7. பூம்பொழில் தெருவில் வசிக்கும் மதிவேந்தன் என்பவரது மகன் புகழேந்தி மாவட்ட மைய நூலகத்தில் நூலக உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை புகழேந்தியாக எண்ணி கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

**42.** (அ) மாணவர் நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்கள், அதனால் ஏற்படும் நன்மைகள் ஐந்தினைப் பட்டியலிடுக. அல்லது

(ஆ)மொழிபெயர்க்க.

The Golden Sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start tweeting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

## பகுதி-V (மதிப்பெண்கள் : 24)

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் **விரிவான** விடையளிக்கவும். $3 \times 8 = 24$

**43.** (அ) இலக்கியச் சான்றுடன் உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழுகுற விவரித்து எழுதுக. அல்லது

(ஆ) காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.

**44.** (அ) இயற்கையோடு இணைந்த வாழ்வினைப் 'பிரும்மம்' கதைவழி விவரித்து எழுதுக. அல்லது

(ஆ) 'புயலிலே ஒரு தோணி' கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும், ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன.

**45.** (அ) 'தமிழ்மொழியின் சிறப்பு' என்ற தலைப்பில் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. முன்னுரை – தமிழின் தொன்மை – சான்றோர் வளர்த்த தமிழ் – சொல்வளம் மிக்கது – வளர்தமிழ் – முடிவுரை. அல்லது

(ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் குறிப்புகளைக் கொண்டு கட்டுரையாக்குக.

குறிப்புகள் : முன்னுரை – கலைத்திருவிழா நிகழ்விடம் – கலைநிகழ்ச்சிகள் – கவர்ந்த கலைநிகழ்ச்சி – கலைகள் வளர்ப்போம் – முடிவுரை.

-oOo-

## GOVT. BOARD EXAM QUESTION PAPER : X - STD : MARCH-2026

**Time Allowed : 3.00 Hours]** **ENGLISH** **[Maximum Marks: 100**

### PART - I

**Note:** (i) Answer **all** the questions. $14 \times 1 = 14$

(ii) Choose the **most appropriate** answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

Choose the appropriate ***synonyms*** for the italicised words.

1. He even ***gnawed*** at the dried pieces of seashell.
(a) swallowed (b) bit (c) drank (d) gulped

2. There was a sudden rush and ***scuffle***.
(a) dance (b) talk (c) fight (d) distraction

3. Those are the times we have to be active and need to ***anticipate*** what could be there ahead.
(a) foresee (b) forebear (c) avoid (d) treat

Choose the appropriate ***antonyms*** for the italicised words.

4. The project was undertaken in ***consonance*** with the National policy to empower women.
(a) argument (b) agreement (c) disagreement (d) amusement

5. I saw a ***frail*** man with bald head sitting.
(a) strong (b) weak (c) delicate (d) fragile

6. I would have forgotten that ***unpleasant*** incident of my childhood.
(a) ugly (b) bad (c) pleasant (d) unhappy

7. Choose the correct *plural form* of '**loaf**'.
(a) loaves (b) loafs (c) loafes (d) loavs

8. Form a derivative by adding the right *prefix* to the word '**accurate**'.
(a) il (b) in (c) un (d) dis

9. Choose the correct expansion of the **abbreviation** '**BCE**'.
(a) Before Complete Era (b) Beside Common Era
(c) Beside Complete Era (d) Before Common Era

10. Complete the following sentence with the most appropriate **phrasal verb** given below.
There will be a _____ next week in the office.
(a) shut out (b) shut down (c) shut up (d) shut in

11. Choose the suitable option to pair it with the word '**house**' to form a **compound word**.
(a) keeping (b) ride (c) rain (d) play

12. Fill in the blank with the most appropriate **preposition** given below.
There are many problems of the disease _____ the East.
(a) until (b) on (c) by (d) in

13. Complete the following sentence using the most appropriate **tense form** of the verb given below. Mani _____ in the school for five years.
(a) is working (b) has been working
(c) working (d) have been working

14. Choose the most appropriate **linker** from the given four alternatives.
My mother called me _____ I was playing football.
(a) while (b) or (c) by (d) if

## PART - II

### SECTION - 1

Answer **any three** of the following questions in **a** sentence or **two**. $3 \times 2 = 6$

15. What was the daily routine of Sanyal?
16. How did the bird try to reach its parents without having to fly?
17. Why did Herman and the author slam the doors?
18. Who is Mr. Culverton Smith?

### SECTION - 2

Read the following sets of poetic lines and answer **any three** of the following. $3 \times 2 = 6$

19. Nothing goes right with the folks you meet
Down on that gloomy complaining street.
(a) What is the opinion about the folks you meet down the street ?
(b) What does the word 'gloomy' mean here?
20. Their hands are ours, and in their lines we read
A labour not different from our own.
(a) What does the word 'their' refer to?
(b) What does the poet mean by 'lines we read'?
21. Not a crumb to be found
On the snow-covered ground;
(a) What couldn't he find on the ground?
(b) Why was the ground covered with snow?
22. Not hurrying to, nor turning from the goal;
Not mourning for the things that disappear
(a) Why do you think the poet is not in a hurry?
(b) What should one not mourn for?

### SECTION - 3

Answer **any three** of the following. $3 \times 2 = 6$

23. Rewrite the sentence in Reported Speech.
Balu said, "Asia is the largest continent."
24. Rewrite the following sentence in Passive Voice.
The carpenter was driving a car.
25. Punctuate the following sentence.
thats my delicate ariel said Prospero
26. Change the following sentence into a simple sentence.
Raghav was old yet he walked fast.
27. Rearrange the words in the correct order to make meaningful sentences.
(a) in / position / women / almost / the / all / major / society / occupy.
(b) Delighted / them / assist/ i / to / was.

## SECTION - 4

28. Answer the following question. $1 \times 2 = 2$

You are at the Bus stop. An old woman asks for direction to the hospital. Guide her with your instructions.




## PART - III

## SECTION - 1

Answer **any two** of the following in a paragraph. $2 \times 5 = 10$

29. How did Watson help his friend to arrest the criminal?
30. "Technology is a boon to the disabled." Justify.
31. Give a brief character sketch of Sasanka Sanyal.
32. Write in detail about the selection and training process which the Indian Navy crew underwent.

## SECTION - 2

Answer **any two** of the following. $2 \times 5 = 10$

33. What feelings are evoked in us by the machines in the poem?
34. How is mystery depicted in the poem, "The House on Elm Street"?
35. Read the following stanza and answer the questions given below.

Let me but live my life from year to year,
With forward face and unreluctant soul;
Not hurrying to, nor turning from the goal;
Not mourning for the things that disappear

(a) Pick out the rhyming words in the given stanza.
(b) Give the rhyme scheme for the given stanza.
(c) Identify the figures of speech in the last two lines.
(d) Pick out the alliterated words in the first line.

36. Paraphrase the following stanza.

She's a lioness; don't mess with her.
She'll not spare you if you're a prankster.
Don't ever try to saw her pride, her self-respect.
She knows how to thaw you, saw you - so beware!

## SECTION - 3

Answer **any one** of the following. 1 × 5 = 5

37. Rearrange the following sentences in coherent order.
(i) The Emperor gave her fine gifts.
(ii) She was very brave and won many battles.
(iii) When Mulan's father heard about the Emperor's order he was about to prepare himself.
(iv) Then Mulan disguised as a man and joined the army.
(v) The emperor ordered one man from each family to join the army.

38. Read the following passage and answer the questions given below.

This story speaks about the people of the twenty-ninth century who live in fairyland. The year is 2889, the date 25th July and the place is the office block of the Managing Editor of the Earth Herald, the world's largest newspaper. In this futuristic story written in 1889, the writer describes how he visualizes the world a thousand years later - a world of technological advancements where newspapers are not printed but 'spoken'.

Questions :
(a) What does the story speak about?
(b) Which is the world's largest newspaper mentioned in this passage?
(c) When is this futuristic story written?
(d) How does the writer describe the world?
(e) Are the newspapers printed?

## SECTION - 4

Answer **any four** of the following: 4 × 5 = 20

39. Prepare an attractive advertisement using the hints given below.
Garuda Motors - EV world - Two wheelers - Electric - Eco-Friendly - Long range - Budget Friendly - Long Life - No.25 Carmel Convent Road - Nagercoil.

40. Write a letter of complaint for the following.
You are Raja. The street lights of your area do not work properly. As a responsible citizen, write a letter to the editor of the newspaper enlightening them about the problem and also suggest ways to brighten the area.

41. You are Nikhil/Nikitha, school pupil leader of GHSS, Trichy. Prepare a notice on behalf of your school inviting the grandparents of the students to celebrate World Elders' Day in your school auditorium on the 20th of next month.

42. Look at the following picture and express your views on it in a paragraph of five sentences.



43. Make notes or write a summary of the following passage.

First came the earthquake, then the sea retreated, almost to the horizon it seemed. But now it was coming back. The wave was high and square with a snowdrift of white foam at its head. It was the biggest wave that I had ever seen, but not so big that I would run away. I had turned thirteen and was not easily scared. The wave would break on the shore, may be even strand a few Bluefin in the sharp grass. I could return home with dinner. Mama would wrap the fish in palm leaves, bake it and serve it with rice cooked in coconut oil. I rubbed my stomach and smiled. But then I remembered. Mama would not cook. She had returned to the village with a headache. The earthquake had given her a migraine. Tonight, Papa would cook. The wave rumbled closer. It made a noise like all the creatures of the world rolled up in a ball. The lion's roar, the bull's bellow, even the snakes hiss. How fabulous!

44. Identify the errors in the following sentences and rewrite them correctly.

(a) But he was honest, he was punished.
(b) My brother go to the temple daily.
(c) My son is fond to music.
(d) Riya is one of my better friends.
(e) The young seagull uttered a joyfully scream.

## SECTION - 5

45. Quote from memory. **1 × 5 = 5**

Remember, no men ..............................
.............................. air and water.

## PART - IV

46. Write a paragraph of about **150** words by developing the following hints. **2 × 8 = 16**

(a) Zigzag - house - Dr. Krishnan - dull - sleep - snore - fan - fruits - neighbours - complain - zigzag - reception - clinic - nurse - table - not sleep - active - Dr. Krishnan - walked - half-door clinic - waiting room - voice - clear - commanding - silence - open mouthed - Krishnan - amazed - grumpy - gone - happy - job - trained - Dr. Krishnan - hospital - calm - peaceful - family - happy.

**OR**

(b) Holland - country - land - below - sea level - walls - dikes - North sea - flooding - land - centuries - worked - walls - safe - dry - children - know - dikes - watched - moment - hole - finger - dangerous - boy - Peter - father - gates - sluices - open - ships - pass - Holland - canals - sea - leak - danger - alarm -people - Peter - home - hero.

47. (a) Read the following paragraph and answer the questions given below.

English plays a vital role in increasing opportunities around the world, it provides access to the information with which individuals can learn and develop

and it provides access to the networks which are vital in building and maintaining economic links. Perhaps more importantly, it provides a common language to share knowledge and ideas and to create the kind of relationships which go beyond a simple deal or contract. It enables people to explore cultural differences and to create the kind of trust and understanding which is vital in negotiating and agreeing to our common future. English has become essential for international communication. Economic growth means that more jobs require English; the expansion of education means that English is needed by more people for studying; and for a growing, globalized, urban middle class English plays a greater role in both their work and personal lives. A quarter of lower primary school students are now first-generation learners who have little support from the family and community and must rely for their learning on what happens in school. A minimum proficiency level in English is increasingly regarded as an entrance requirement for university.

**Questions :**

(i) Which language plays an important role in increasing opportunities?
(ii) How is English important as a common language?
(iii) Why is English needed by more people?
(iv) How does English help people?

**OR**

(b) Read the following poem and answer the questions given below.

Memories of My Dad

He wasn't a hero
Known by the world,
But a hero he was
To his little girl.

My daddy was God,
Who knew all things.
And better than Santa,
With the gifts he'd bring.

I knew his voice
Before I could speak.
And loves it when
He would sing me to sleep.

**Questions:**

(i) What was Dad to his little girl?
(ii) Why did the girl call her Dad, a God?
(iii) How was her Dad better than Santa?
(iv) Who knew the voice of Dad?

-oOo-

## பத்தாம் வகுப்பு : அரசு பொதுத்தேர்வு வினாத்தாள் : ஏப்ரல்-2026

**கால அளவு : 3.00 மணி நேரம்]** **கணிதம்** **[மொத்த மதிப்பெண்கள் : 100**

### பகுதி-I

குறிப்பு: (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். $14 \times 1 = 14$

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. $\{(a, 8), (6, b)\}$ ஆனது ஒரு சமனிச்சார்பு எனில், a மற்றும் b மதிப்புகளாவன முறையே
(அ) $(8, 6)$ (ஆ) $(8, 8)$ (இ) $(6, 8)$ (ஈ) $(6, 6)$

2. $f(x) = (x+1)^3 - (x-1)^3$ குறிப்பிடும் சார்பானது
(அ) நேரிய சார்பு (ஆ) ஒரு கனச் சார்பு (இ) தலைகீழ்ச் சார்பு (ஈ) இருபடிச் சார்பு

3. 65 மற்றும் 117-யின் மீ.பொ.வ-வை $65m - 117$ என்ற வடிவில் எழுதும்போது, m-யின் மதிப்பு
(அ) 4 (ஆ) 2 (இ) 1 (ஈ) 3

4. $(1^3 + 2^3 + 3^3 + ... + 15^3) - (1 + 2 + 3 + ... + 15)$ -யின் மதிப்பு
(அ) 14400 (ஆ) 14200 (இ) 14280 (ஈ) 14520

5. $x + y - 3z = -6, -7y + 7z = 7, 3z = 9$ என்ற தொகுப்பின் தீர்வு
(அ) $x = 1, y = 2, z = 3$ (ஆ) $x = -1, y = 2, z = 3$
(இ) $x = -1, y = -2, z = 3$ (ஈ) $x = 1, y = -2, z = 3$

6. கொடுக்கப்பட்ட அணி $A = \begin{pmatrix} 1 & 3 & 5 & 7 \\ 2 & 4 & 6 & 8 \\ 9 & 11 & 13 & 15 \end{pmatrix}$ -க்கான நிரை நிரல் மாற்று அணியின் வரிசை
(அ) $2 \times 3$ (ஆ) $3 \times 2$ (இ) $3 \times 4$ (ஈ) $4 \times 3$

7. 6 மீ மற்றும் 11 மீ உயரமுள்ள இரு கம்பங்கள் சமதளத் தரையில் செங்குத்தாக உள்ளன. அவற்றின் அடிகளுக்கு இடையேயுள்ள தொலைவு 12 மீ எனில், அவற்றின் உச்சிகளுக்கு இடையே உள்ள தொலைவு என்ன?
(அ) 13 மீ (ஆ) 14 மீ (இ) 15 மீ (ஈ) 12.8 மீ

8. $3x - y = 4$ மற்றும் $x + y = 8$ ஆகிய நேர்கோடுகள் சந்திக்கும் புள்ளி
(அ) (5,3) (ஆ) (2,4) (இ) (3,5) (ஈ) (4,4)

9. $x = 11$ எனக் கொடுக்கப்பட்ட நேர்கோட்டின் சமன்பாடானது
(அ) X-அச்சுக்கு இணை (ஆ) Y-அச்சுக்கு இணை
(இ) ஆதிப் புள்ளி வழிச் செல்லும் (ஈ) $(0, 11)$ என்ற புள்ளி வழிச்செல்லும்

10. $\tan\theta + \cot\theta = 2$ எனில், $\tan^2\theta + \cot^2\theta$ -ன் மதிப்பு
(அ) $2$ (ஆ) $4$ (இ) $\sqrt{2}$ (ஈ) $0$

11. $x$ செ.மீ ஆரமுள்ள ஒரு திண்மக் கோளம் உருக்கப்பட்டு அதே ஆரமுள்ள ஒரு கூம்பாக மாற்றப்படுகிறது. எனில், கூம்பின் உயரம்
(அ) $3x$ செ.மீ (ஆ) $x$ செ.மீ (இ) $4x$ செ.மீ (ஈ) $2x$ செ.மீ

12. $r_1$ அலகுகள் ஆரமுள்ள ஒரு கோளப்பந்து உருக்கப்பட்டு, $r_2$ அலகுகள் ஆரமுடைய 8 சமகோள பந்துகளாக ஆக்கப்படுகிறது எனில், $r_1 : r_2$
(அ) 2 : 1 (ஆ) 1 : 2 (இ) 4 : 1 (ஈ) 1 : 4

13. ஒரு புள்ளி விவரத் தொகுப்பின், $\Sigma x^2 = 140, \Sigma x = 28$ மற்றும் $n = 7$ எனில், அதன் திட்ட விலக்கம்
(அ) $4$ (ஆ) $2$ (இ) $16$ (ஈ) $8$

14. p சிவப்பு, q நீலம், r பச்சை நிறக் கூழாங்கற்கள் உள்ள ஒரு குடுவையில் இருந்து ஒரு சிவப்பு கூழாங்கல் எடுப்பதற்கான நிகழ்தகவானது

(அ) $\frac{q}{p+q+r}$ (ஆ) $\frac{p}{p+q+r}$ (இ) $\frac{p+q}{p+q+r}$ (ஈ) $\frac{p+r}{p+q+r}$

## பகுதி-II

குறிப்பு: எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். $10 \times 2 = 20$

15. R என்ற ஒரு உறவு $\{(x, y) \mid y = x + 3, x \in \{0, 1, 2, 3, 4, 5\}\}$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பகத்தையும், வீச்சகத்தையும் கண்டறிக.
16. $X = \{-5, 1, 3, 4\}$ மற்றும் $Y = \{a, b, c\}$ எனில், $R = \{(-5, a), (1, a), (3, b)\}$ என்ற உறவானது X-லிருந்து Y-க்கு சார்பாகுமா?
17. $71 \equiv x$ (மட்டு 8) என்ற சமன்பாட்டை நிறைவு செய்யக்கூடிய குறைந்தபட்ச மிகை முழு $x$-ன் மதிப்பைக் காண்க.
18. $9 + 3 + 1 + \ldots$ என்ற முடிவுறா தொடரின் கூடுதல் காண்க.
19. $\frac{x^2-16}{x^2+8x+16}$ எனும் விகிதமுறு கோவையை எளிய வடிவில் சுருககுக.
20. ஓர் எண் மற்றும் அதன் தலைகீழி ஆகியவற்றின் வித்தியாசம் $\frac{24}{5}$ எனில், அந்த எண்ணைக் காண்க.
21. $a_{ij} = |i - 2j|$ என்ற அமைப்பைக் கொண்ட $3 \times 3$ வரிசையுடைய அணியினைக் காண்க.
22. $\Delta ABC$-யின் பக்கங்கள் AB மற்றும் AC-ல் அமைந்த புள்ளிகள் முறையே D மற்றும் E. மேலும், $AB = 5.6$ செ.மீ, $AD = 1.4$ செ.மீ, $AC = 7.2$ செ.மீ மற்றும் $AE = 1.8$ செ.மீ எனில், $DE \parallel BC$ எனக் காட்டுக.
23. $(14, 10)$ மற்றும் $(14, -6)$ ஆகிய புள்ளிகளை இணைக்கும் நேர்கோட்டின் சாய்வைக் காண்க.
24. 4 மற்றும் $-6$ -ஐ முறையே $x$ மற்றும் $y$ அச்சுக்களின் வெட்டுத் துண்டுகளாக கொண்ட நேர்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.
25. $\sqrt{\frac{1+\cos\theta}{1-\cos\theta}} = \operatorname{cosec}\theta + \cot\theta$ என்பதை நிரூபிக்கவும்.
26. முதல் 21 இயல் எண்களின் திட்ட விலக்கத்தைக் காண்க.
27. ஒரு பகடை உருட்டப்படும் அதே நேரத்தில் ஒரு நாணயமும் சுண்டப்படுகிறது. பகடையில் ஒற்றைப்படை எண் கிடைப்பதற்கும், நாணயத்தில் தலை கிடைப்பதற்குமான நிகழ்தகவைக் காண்க.
28. ஒரு கனச்சதுரத்தின் கன அளவிற்கும், அக்கனச்சதுரத்தினுள் சரியாக பொருந்தும் ஒரு மிகப்பெரிய கோளத்தின் கன அளவிற்கும் உள்ள விகிதம் காண்க.

## பகுதி-III

குறிப்பு: எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 42-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். $10 \times 5 = 50$

29. $A = \{x \in W \mid x < 2\}$, $B = \{x \in N \mid 1 < x \leq 4\}$ மற்றும் $C = \{3, 5\}$ எனில், $A \times (B \cap C) = (A \times B) \cap (A \times C)$ என்பதைச் சரிபார்க்கவும்.

30. $f(x) = x - 1, g(x) = 3x + 1$ மற்றும் $h(x) = x^2$ எனில், $(f \circ g) \circ h = f \circ (g \circ h)$ என நிறுவுக.

31. 300-க்கும் 600-க்கும் இடையே 7-ஆல் வகுபடும் அனைத்து இயல் எண்களின் கூடுதல் காண்க.

32. $3 + 33 + 333 + \ldots$ என்ற தொடர் வரிசையின் n-உறுப்புகளின் கூடுதல் காண்க.

33. $A = \begin{pmatrix} 5 & 2 & 9 \\ 1 & 2 & 8 \end{pmatrix}, B = \begin{pmatrix} 1 & 7 \\ 1 & 2 \\ 5 & -1 \end{pmatrix}$ எனில், $(AB)^T = B^T A^T$ என்பதைச் சரிபார்க்கவும்.

34. ஒரு முக்கோணத்தின் கோண இருசம வெட்டிகள் ஒரு புள்ளியின் வழியாகச் செல்லும் எனக் காட்டுக.

35. $(8, 6), (5, 11), (-5, 12)$ மற்றும் $(-4, 3)$ ஆகிய புள்ளிகளை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பைக் காண்க.

36. $\Delta$ABC-யின் முனைகள் A(–3, 0), B(10, –2) மற்றும் C(12, 3) எனில், முனை A-யிலிருந்து வரையப்படும் குத்துக்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.

37. இரு கப்பல்கள் கலங்கரை விளக்கத்தின் இரு பக்கங்களிலும் கடலில் பயணம் செய்கின்றன. இரு கப்பல்களிலிருந்து கலங்கரை விளக்கத்தின் உச்சியின் ஏற்றக்கோணங்கள் முறையே $30^o$ மற்றும் $45^o$ ஆகும். கலங்கரை விளக்கத்தின் உயரம் $200$ மீ எனில், இரு கப்பல்களுக்கு இடையே உள்ள தொலைவைக் காண்க.$(\sqrt{3}=1.732)$

38. நீளம் 3 மீ மற்றும் விட்டம் 2.8 மீ உடைய ஒரு சமன்படுத்தும் உருளையைக் கொண்டு ஒரு தோட்டம் சமன்படுத்தப்படுகிறது. 8 சுற்றுகளில் எவ்வளவு பரப்பை உருளை சமன் செய்யும்?

39. விட்டம் 14 செ.மீ, உயரம் 8 செ.மீ உடைய ஒரு திண்ம நேர்வட்டக் கூம்பு ஓர் உள்ளீடற்ற கோளமாக உருமாற்றப்படுகிறது. கோளத்தின் வெளிவிட்டம் 10 செ.மீ எனில், உள்விட்டத்தைக் காண்க.

40. $24, 26, 33, 37, 29, 31$ ஆகியவற்றின் மாறுபாட்டுக் கெழுவைக் காண்க.

41. இரண்டு பகடைகள் உருட்டப்படுகின்றன. இரண்டு முக மதிப்புகளும் சமமாக இருக்க அல்லது முக மதிப்புகளின் கூடுதல் 4 ஆக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?

42. $\alpha$ மற்றும் $\beta$ என்பன $2x^2 - 3x + 1 = 0$ எனும் இருபடிச்சமன்பாட்டின் மூலங்கள் எனில், $\dfrac{1}{\alpha^2}$ மற்றும் $\dfrac{1}{\beta^2}$ ஆகியவற்றை மூலங்களாகக் கொண்ட இருபடிச்சமன்பாட்டைக் காண்க.

## பகுதி-IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $2 \times 8 = 16$

43. (அ) கொடுக்கப்பட்ட முக்கோணம் PQR-க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{3}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{3}{5} < 1$) (அல்லது)

(ஆ) 6 செ.மீ விட்டமுள்ள வட்டம் வரைந்து வட்டத்தின் மையத்திலிருந்து 8 செ.மீ தொலைவில் P என்ற புள்ளியைக் குறிக்கவும். அப்புள்ளியிலிருந்து PA மற்றும் PB என்ற இரு தொடுகோடுகள் வரைந்து அவற்றின் நீளங்களை அளவிடுக.

44. (அ) $x^2 - 6x + 9 = 0$ என்ற இருபடிச் சமன்பாட்டின் வரைபடம் வரைக. அதன் தீர்வுகளின் தன்மையைக் காண்க. (அல்லது)

(ஆ) $y = \dfrac{1}{2}x$ என்ற நேரிய சமன்பாட்டின் வரைபடம் வரைக. விகித சம மாறிலியை அடையாளம் கண்டு, அதனை வரைபடத்துடன் சரிபார்க்க. மேலும் (i) $x = 9$ எனில், $y$-ஐக் காண்க. (ii) $y = 7.5$ எனில் $x$-ஐக் காண்க.

-oOo-

# பத்தாம் வகுப்பு : அரசுப் பொதுத்தேர்வு வினாத்தாள் : ஏப்ரல்–2026

கால அளவு : 3.00 மணி நேரம்] **அறிவியல்** [மொத்த மதிப்பெண்கள் : 75

## பகுதி-I

குறிப்பு: (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். $12 \times 1 = 12$

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. நிறை மதிப்பு மாறாமல் புவியானது தனது ஆரத்தில் 50% சுருங்கினால் புவியில் பொருட்களின் எடையானது
   (அ) 50% குறையும் (ஆ) 50% அதிகரிக்கும்
   (இ) 25% குறையும் (ஈ) 300% அதிகரிக்கும்
2. குவி லென்சின் உருப்பெருக்கமானது எப்போதும் _____ மதிப்புடையது.
   (அ) நேர்க்குறி (ஆ) எதிர்க்குறி
   (இ) நேர்க்குறி (அ) எதிர்க்குறி (ஈ) சுழி
3. ஒரு எளிய மின்சுற்றில் சாவியை மூடியவுடன் மின்விளக்கு ஒளிர்வது ஏன் ?
   (அ) சாவி மின்சாரத்தை தயாரிக்கிறது
   (ஆ) சாவி மூடியிருக்கும் போது மின்சுற்றின் சுற்றுப் பாதையை மூடி விடுகிறது
   (இ) சாவி மூடியிருக்கும் போது மின்சுற்றின் சுற்றுப் பாதை திறக்கிறது
   (ஈ) மின்விளக்கு மின்னேற்றமடையும்
4. அணுக்கரு வினையில் ${}_{6}X^{12} \xrightarrow{\alpha \text{ சிதைவு}} {}_{Z}Y^{A}$ எனில், A மற்றும் Z-ன் மதிப்பு
   (அ) 8, 6 (ஆ) 8, 4
   (இ) 4, 8 (ஈ) கொடுக்கப்பட்ட தரவுகளிலிருந்து காண இயலாது
5. நவீன ஆவர்த்தன விதியின் அடிப்படை _____.
   (அ) அணு எண் (ஆ) அணு நிறை
   (இ) ஐசோடோப்பின் நிறை (ஈ) நியூட்ரானின் எண்ணிக்கை
6. 100 மி.லி நீரில் சோடியம் குளோரைடின் கரைதிறன் 36 கி. 25 கி சோடியம் குளோரைடு 100 மி.லி நீரில் கரைத்த பிறகு மேலும் எவ்வளவு உப்பை சேர்த்தால் தெவிட்டிய கரைசல் உருவாகும் ?
   (அ) 12 கி (ஆ) 11 கி (இ) 16 கி (ஈ) 20 கி
7. தூளாக்கப்பட்ட $CaCO_3$, கட்டியான $CaCO_3$-ஐ விட தீவிரமாக வினைபுரிகிறது. காரணம்
   (அ) அதிக புறப்பரப்பளவு (ஆ) அதிக அழுத்தம்
   (இ) அதிக செறிவினால் (ஈ) அதிக வெப்பநிலை
8. பின்வரும் படிவரிசை சேர்மங்களில் தொடர்ச்சியாக வரும் இணை எது ?
   (அ) $C_3H_8$ மற்றும் $C_4H_{10}$ (ஆ) $C_2H_2$ மற்றும் $C_2H_4$
   (இ) $CH_4$ மற்றும் $C_3H_6$ (ஈ) $C_2H_5OH$ மற்றும் $C_4H_8OH$
9. உள்நோக்கிய சைலம் என்பது எதன் சிறப்புப் பண்பாகும் ?
   (அ) வேர் (ஆ) தண்டு (இ) இலைகள் (ஈ) மலர்கள்

10. பன்மய நிலையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குரோமோசோம்களை இழத்தல் ______ என அழைக்கப்படுகிறது.
(அ) நான்மய நிலை (ஆ) அன்யூபிளாய்டி (இ) யூபிளாய்டி (ஈ) பல பன்மய நிலை

11. அளவுக்கு மிஞ்சிய மதுப்பழக்கத்தினால் உருவாவது
(அ) ஞாபக மறதி (ஆ) கல்லீரல் சிதைவு
(இ) மாயத் தோற்றம் (ஈ) மூளைச் செயல்பாடு குறைதல்

12. நிரலாக்கத்தை தொகுக்கப் பயன்படுவது எது ?
(அ) Inkscape (ஆ) script editor (இ) stage (ஈ) sprite

## பகுதி-II

குறிப்பு: **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **22–க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். $7 \times 2 = 14$

13. பாயில் விதியைக் கூறுக.
14. ஒப்பு அணுநிறை – வரையறுக்கவும்.
15. துரு என்பது என்ன ? துரு உருவாகுவதன் சமன்பாட்டை தருக.
16. எளிய கீட்டோனின் பெயரையும், மூலக்கூறு வாய்பாட்டையும் எழுதுக.
17. மனிதர்களின் சுற்றோட்டமானது இரட்டைச் சுற்றோட்டம் என அழைக்கப்படுகிறது. ஏன் ?
18. நாளமுள்ளச் சுரப்பிக்கும், நாளமில்லாச் சுரப்பிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.
19. மாதவிடாயின் போது மாதவிடாய் சுகாதாரம் எவ்வாறு பராமரிக்கப்படுகிறது ?
20. ஆர்க்கியாப்டெரிக்ஸ் இணைப்பு உயிரியாக ஏன் கருதப்படுகிறது ?
21. பொருத்துக.
(1) உயிரி வாயு – ஆற்றல் சேமிப்பு
(2) இயற்கை வாயு – $CO_2$
(3) பசுமை இல்ல வாயு – புதுப்பிக்கத்தக்க ஆற்றல்
(4) CFL பல்புகள் – புதுப்பிக்க இயலாத ஆற்றல்
22. **500** Hz அதிர்வெண்ணை உடைய ஒலிமூலமானது, **30** மீவி$^{-1}$ வேகத்தில் கேட்குநரை நோக்கி நகர்கிறது. காற்றில் ஒலியின் வேகம் **330** மீவி$^{-1}$ எனில், கேட்குநரால் உணரப்படும் ஒலியின் அதிர்வெண் என்ன ?

## பகுதி-III

குறிப்பு: **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **32–க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். $7 \times 4 = 28$

23. (அ) ஒளியின் ஏதேனும் இரண்டு பண்புகளைக் கூறுக.
(ஆ) குவிலென்சு ஒன்றில் F மற்றும் 2F புள்ளிகளுக்கு இடையே பொருள் வைக்கப்படும் போது உருவாக்கப்படும் பிம்பத்திற்கான கதிர் படம் வரைக.
24. (அ) நீள் வெப்ப விரிவு மற்றும் பரப்பு வெப்ப விரிவு – வேறுபடுத்துக.
(ஆ) உண்மை வெப்ப விரிவு குணகம் என்றால் என்ன ?
25. வாயுக்களில் ஒலியின் திசைவேகத்தைப் பாதிக்கும் காரணிகள் எவை ?
26. (i) ஜப்பானில் இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு புதிதாகப் பிறக்கும் சில குழந்தைகளுக்குப் பிறவிக் குறைபாடுகள் காணப்படுவது ஏன் ?
(ii) வேளாண்மைத் துறையில் கதிரியக்க ஐசோடோப்புகளின் பயன்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக.

27. (அ) HF மூலக்கூறில் உள்ள H மற்றும் F-க்கு இடையில் உள்ள பிணைப்பு எது ?
(ஆ) இப்பிணைப்பை அறிய உதவும் ஆவர்த்தன பண்பு எது ?
(இ) இப்பண்பு தொடரிலும், தொகுதியிலும் எவ்வாறு வேறுபடுகிறது ?

28. எத்தனாயிக அமிலம் எத்தனாலில் இருந்து எவ்வாறு தயாரிக்கப்படுகிறது ? அவ்வினைக்கான சமன்பாட்டை எழுதுக.

29. (i) முயலின் சுவாசக் குழாயில் குருத்தெலும்பு வளையங்கள் காணப்படுவது ஏன் ?
(ii) அட்டையில் காணப்படும் ஒட்டுண்ணி தகவமைப்புகளை எழுதுக. (ஏதேனும் இரண்டு)

30. நியூரான்கள், அவற்றின் அமைப்பின் அடிப்படையில் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது ?

31. காடுகளின் முக்கியத்துவம் பற்றி கூறுக.

32. 70 மி.லி கொள்ளளவு உள்ள கொள்கலனில் 50 மி.லி திரவம் நிரப்பப்பட்டுள்ளது. திரவம் அடங்கிய கொள்கலனை வெப்பப்படுத்தும் போது திரவத்தின் நிலை கொள்கலனில் 50 மி.லி-லிருந்து 48.5 மி.லி ஆக குறைகிறது. மேலும் வெப்பப்படுத்தும் போது கொள்கலனில் திரவத்தின் நிலை 51.2 மி.லி ஆக உயருகிறது எனில், திரவத்தின் உண்மை வெப்ப விரிவு மற்றும் தோற்ற வெப்ப விரிவைக் கணக்கிடுக.

## பகுதி-IV

குறிப்பு: **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். தேவையான இடங்களில் படம் வரையவும். $3 \times 7 = 21$

33. (அ) (i) நிலைமத்தின் பல்வேறு வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
(ii) கிரிக்கெட் விளையாட்டில் மேலிருந்து விழும் பந்தினை பிடிக்கும் போது, விளையாட்டு வீரர், தம் கையினை பின்னோக்கி இழுப்பது ஏன் ?

அல்லது

(ஆ) (i) $1\,\Omega$, $2\,\Omega$ மற்றும் $4\,\Omega$ ஆகிய மின்தடைகளைக் கொண்ட மூன்று மின்தடையாக்கிகள் ஒரு மின்சுற்றில் இணையாக இணைக்கப்பட்டுள்ளது. $1\,\Omega$ மின்தடை கொண்ட மின்தடையாக்கி வழியாக 1A மின்னோட்டம் சென்றால் மற்ற இரு மின்தடையாக்கிகள் வழியாக செல்லும் மின்னோட்டத்தின் மதிப்பினைக் காண்க.
(ii) ஓம் விதி – வரையறு.

34. (அ) (i) இருமடிக் கரைசல் என்றால் என்ன ?
(ii) கீழ்கண்டவற்றுக்கு தலா ஒரு எடுத்துக்காட்டு தருக. (1) திரவத்தில் வாயு (2) திரவத்தில் திண்மம் (3) திண்மத்தில் திண்மம் (4) வாயுவில் வாயு
(iii) நீர்க்கரைசல் மற்றும் நீரற்ற கரைசல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

அல்லது

(ஆ) (i) இரட்டை இடப்பெயர்ச்சி வினையின் வகைகளை தகுந்த எடுத்துக்காட்டுடன் விளக்குக.
(ii) $1.0 \times 10^{-4}$ மோலார் செறிவுள்ள $HNO_3$ கரைசலின் pH மதிப்பை கணக்கிடுக.

35. (அ) (i) மலரும் தாவரங்களில் காணப்படும் மூன்று வகையான திசுத் தொகுப்புகளை குறிப்பிடுக.
(ii) ஒளிச்சேர்க்கை என்றால் என்ன ? இது செல்லில் எங்கு நடைபெறுகிறது ?
(iii) சுவாச ஈவு என்றால் என்ன ?

அல்லது

(ஆ) (i) மெண்டல் தன் ஆய்விற்கு ஏன் தோட்டப் பட்டாணிச் செடியைத் தேர்ந்தெடுத்தார் ?
(ii) ஒகசாகி துண்டுகள் என்றால் என்ன ?
(iii) ஒரு டி.என்.ஏ இரண்டு ______ இழைகளால் ஆனது.

-oOo-

# பத்தாம் வகுப்பு : அரசுப் பொதுத்தேர்வு வினாத்தாள் : ஏப்ரல்–2026

காலஅளவு : 3.00 மணி நேரம்] **சமூக அறிவியல்** [மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி-I

குறிப்பு: (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். $14 \times 1 = 14$

(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. ''ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்'' எனக் கூறியவர் யார் ?
(அ) லெனின் (ஆ) மார்க்ஸ் (இ) சன் யாட் சென் (ஈ) மா சே துங்

2. யாருடைய ஆக்கிரமிப்பின் போது மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று ?
(அ) ஹெர்னன் கோர்ட்ஸ் (ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ
(இ) தௌசெயின்ட் லாவெர்ட்யூர் (ஈ) முதலாம் பெட்ரோ

3. எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது ?
(அ) 1979 (ஆ) 1989 (இ) 1990 (ஈ) 1991

4. ''சத்யார்த்தபிரகாஷ்'' எனும் நூலின் ஆசிரியர் யார் ?
(அ) தயானந்த சரஸ்வதி (ஆ) அயோத்தி தாசர்
(இ) அன்னிபெசன்ட் (ஈ) நாராயண குரு

5. கீழ்க்காண்போரில் தீவிர தேசியவாதி யார் ?
(அ) தாதாபாய் நௌரோஜி (ஆ) நீதிபதி கோவிந்த் ரானடே
(இ) பிபின் சந்திர பால் (ஈ) ரொமேஷ் சந்திரா

6. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி ______ .
(அ) தமிழ்நாடு (ஆ) கேரளா (இ) பஞ்சாப் (ஈ) மத்தியப் பிரதேசம்

7. ஆறுகளின் மூலம் உருவாகும் மண்
(அ) செம்மண் (ஆ) கரிசல் மண் (இ) பாலை மண் (ஈ) வண்டல் மண்

8. மிக அதிகமாகக் கிடைக்கக்கூடிய ஆற்றல் வளம்
(அ) உயிரி சக்தி (ஆ) சூரியன் (இ) நிலக்கரி (ஈ) எண்ணெய்

9. இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள்
(அ) சிமெண்ட் (ஆ) ஆபரணங்கள் (இ) தேயிலை (ஈ) பெட்ரோலியம்

10. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை
(அ) 3 மற்றும் 15 (ஆ) 4 மற்றும் 16 (இ) 3 மற்றும் 16 (ஈ) 4 மற்றும் 15

11. மாநில ஆளுநரை நியமிப்பவர்
(அ) பிரதமர் (ஆ) முதலமைச்சர்
(இ) குடியரசுத் தலைவர் (ஈ) தலைமை நீதிபதி

12. எத்தனை மாநிலங்கள் நேபாளத்துடன் தங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன ?
(அ) ஐந்து (ஆ) நான்கு (இ) மூன்று (ஈ) இரண்டு

13. முதன்மைத் துறை இதனை உள்ளடக்கியது
(அ) வேளாண்மை (ஆ) தானியங்கிகள்
(இ) வர்த்தகம் (ஈ) வங்கி

14. 1632–இல் ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர்மேன்" வழங்கியவர் யார் ?
(அ) ஜஹாங்கீர் (ஆ) கோல்கொண்டா சுல்தான்
(இ) அக்பர் (ஈ) ஔரங்கசீப்

பகுதி-II

பிரிவு–1

குறிப்பு: **எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28–க்கு** **கட்டாயமாக** விடையளிக்கவும். 10 × 2 = 20

15. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை ?
16. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை ?
17. திருச்சிராப்பள்ளி பேரறிக்கையின் (1801) முக்கியக் கூறுகளைத் தருக.
18. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்.
19. திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.
20. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.
21. "ஜெட் காற்றோட்டங்கள்" என்றால் என்ன ?
22. இந்தியாவின் தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக.
23. பேரிடர் அபாய நேர்வு குறைப்பு – வரையறுக்கவும்.
24. கோயம்புத்தூர் ஏன் தென்னிந்தியாவின் "மான்செஸ்டர்" என அழைக்கப்படுகிறது ?
25. உயர் நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்கள் பற்றி நீவிர் புரிந்து கொண்டதென்ன ?
26. சார்க் (SAARC) உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
27. பசுமைப் புரட்சியின் விளைவுகள் என்ன ?
28. சிப்காட் (SIPCOT) – சிறு குறிப்பு வரைக.

பகுதி-III

குறிப்பு: **எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **42–க்கு** **கட்டாயமாக** விடையளிக்கவும். 10 × 5 = 50

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
(i) படை நீக்கம் செய்யப்பட்ட ______ பகுதியை ஹிட்லர் தாக்கினார்.
(ii) இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் ______ ஆவார்.
(iii) கிழக்குத் தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் உள்ள உயரமான சிகரம் ______ ஆகும்.
(iv) அரசியல் நிர்ணய சபையின் தற்காலிகத் தலைவராக ______ தேர்ந்தெடுக்கப்பட்டார்.
(v) திருப்பூர்______ தொழிலுக்குப் பெயர்பெற்றது.
30. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதிக்கவும்.
31. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்க.
32. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கவும்.

33. (அ) வேறுபடுத்துக.
(i) மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்
(ii) ராபி பருவம் மற்றும் காரிப் பருவம்
(ஆ) காரணம் கூறுக.
கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகின்றன.
34. கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக.
35. இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்.
36. தமிழ்நாட்டின் கனிம பரவலை விளக்குக.
37. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.
38. நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை திறனாய்வு செய்க.
39. GDP கணக்கிடும் முறைகள் யாவை ? அவற்றை விளக்கவும்.
40. GST–யின் அமைப்பை எழுதுக.
41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்குட்பட்ட முக்கிய வரலாற்று நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.
42. உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.
(i) மொராக்கோ (ii) ஜெர்மனி (iii) ரஷ்யா (iv) ஹிரோஷிமா (v) சான் பிரான்சிஸ்கோ

## பகுதி-IV

குறிப்பு: பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். $2 \times 8 = 16$

43. (அ) காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராய்க.

அல்லது

(ஆ) தமிழ் மறுமலர்ச்சியின் தோற்றம், வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதவும்.

44. (அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்.
(i) கிழக்கு தொடர்ச்சி மலை (ii) மாளவ பீடபூமி
(iii) கோதாவரி ஆறு (iv) மலைக்காடுகள்
(v) அகஸ்திய மலை உயிர்க்கோளப் பெட்டகம்
(vi) அந்தமான் நிக்கோபர் தீவுகள்
(vii) தேயிலை விளையும் பகுதி (ஏதேனும் ஒன்று)
(viii) எவரெஸ்ட் சிகரம்

அல்லது

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்.
(i) பாக் நீர்சந்தி (ii) வைகை ஆறு
(iii) சென்னை (iv) முதுமலை வனவிலங்கு சரணாலயம்
(v) நெல் விளையும் பகுதி (ஏதேனும் ஒன்று)
(vi) மணிமுத்தாறு அணை
(vii) கன்னியாகுமரி (viii) காகித தொழிலகங்கள் (ஏதேனும் ஒன்று)

-oOo-